## கருத்தரங்கக் குழுக்கள்

புரவலர்கள்:

அருள்முனைவர் **பவுல்ராஜ் மைக்கேல்** சே.ச.

அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

அருள்முனைவர் **ம. ஆரோக்கியசாமி சேவியர்** சே.ச.

செயலர், தூய வளனார் கல்லூரி

அருள்முனைவர் **சி.மரியதாஸ்** சே.ச.

முதல்வர், தூய வளனார் கல்லூரி

முனைவர் **ஜெ. ஜான் லவ் ஜாய்**

புலத்தலைவர், மொழிகள் மற்றும் பண்பாட்டுப் புலம்

அமைப்பாளர் : முனைவர் **ஆ. ஜோசப் சகாயராஜ்**
தமிழாய்வுத் துறைத்தலைவர்

துணைஅமைப்பாளர் : முனைவர் **சி. பாக்கிய செல்வரதி**
ஒருங்கிணைப்பாளர், தமிழ்த்துறை (பணிமுறை - II)

கருத்தரங்கச்செயலர் : முனைவர் **ஞா. பெஸ்கி**

பொருளர் : முனைவர் **ஜா. சலேத்**

பதிப்புக்குழு : முனைவர் **ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**
முனைவர் **ஆ. ராஜாத்தி**
முனைவர் **ஜோ.நெல்சன்**

அமர்வு ஏற்பாட்டுக்குழு : முனைவர் **ஆ. மரிய தனபால்**
முனைவர் **போ. ஜான்சன்**

பதிவுக்குழு : முனைவர் **ரெ. நல்லமுத்து**
முனைவர் **ஆ. அடைக்கலராஜ்**
முனைவர் **இரா. முரளி கிருட்டினன்**

உணவுக்குழு : முனைவர் **டே. வில்சன்**
முனைவர் **கு. அந்தோணி ராஜா**
முனைவர் **கா. ஜான் கென்னடி**
முனைவர் **லூ. அருண் பிரகாஷ்**

மேடைப் பொறுப்புக்குழு : முனைவர் **சி. ஷகிலா பானு**
முனைவர் **சு. சீனிவாசன்**
முனைவர் **ம. தனலெட்சுமி**

வரவேற்புக் குழு : முனைவர் **சி. ஆரோக்கிய தனராஜ்**
முனைவர் **ஜா. ஸ்டெல்லா மேரி**
முனைவர் **லோ. ரூபா**

மக்கள் தொடர்புக்குழு : திருமிகு. **இ. யோகராஜ்**
முனைவர் **லா. சார்லஸ்**
திருமிகு. **மா. ராஜா**

நூல்-அஞ்சல்

**தேசியக் கருத்தரங்கம்**

**இந்திய அறிவு மரபில் நாட்டுப்புறவியலின் கொடை**

(Contribution of Folklore to Indian Knowledge system)

பெறுநர்:

**தொடர்பு முகவரி**

**முனைவர் ஞா.பெஸ்கி**
கருத்தரங்கச் செயலர்,
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 02

தொலைபேசி : 0431 - 4226401 / அலைபேசி : 9487852571

# தேசியக் கருத்தரங்கம்

## இந்திய அறிவு மரபில் நாட்டுப்புறவியலின் கொடை

(Contribution of Folklore to Indian Knowledge system)

**19, 20 பிப்ரவரி 2026**





**தமிழாய்வுத்துறை**

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் (NAAC)
நான்காம் சுற்றில் A⁺⁺ தரச் சான்று பெற்றது.
சிறப்புத் தொன்மைத் தகுதியும் ஆற்றல் வளத் தனித் தகுதியும் பெற்றது.
NIRF மதிப்பீட்டில் 25ஆம் இடம் பெற்றது.
**திருச்சிராப்பள்ளி - 620 002, தமிழ்நாடு, இந்தியா.**

இனிய பெருந்தகையீர்,

வணக்கம். தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகரில் உண்மைக்கும் நன்மைக்கும் என்னும் விருதுவாக்கோடு கல்விவழி மனிதம் மலரச் செய்யும் இலக்குடன் 182 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றிவருகிறது தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி. மதுரை மறைமாநில சேசுசபையினரால் நடத்தப்படுகின்ற இக்கல்லூரியே, 2019இல் நடைபெற்ற தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் (நான்காம் சுற்று) மதிப்பீட்டில் A++ தகுதியைப் பெற்ற முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகும். தமிழகத்தில் உள்ள கல்லூரிகளுள் பல்கலைக்கழக மானியக்குழுவின் சிறப்புத் தொன்மைத் தகுதியைப் பெற்றுள்ள ஒரே கல்லூரியும் இதுவேயாகும். இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும் ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதிலும் முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை 29 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆண்டுதோறும் காலத்திற்கேற்ற தலைப்புகளில் தேசிய / பன்னாட்டு / மாநில அளவிலான கருத்தரங்குகளை நடத்துவதும், தொடக்கவிழாவிலே கருத்தரங்க ஆய்வுக்கோவையை வெளியிடுவதுமான மரபைப் பின்பற்றி வருகின்றது. இத்தகைய ஆய்வுப்போக்கினைத் தொடர்ந்து பேணிக்காத்திடும் நோக்கில் '**இந்திய அறிவு மரபில் நாட்டுப்புறவியலின் கொடை**' என்னும் பொருண்மையில் தேசியக் கருத்தரங்கை 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 மற்றும் 20 ஆகிய நாள்களில் நடத்துவதற்குத் தமிழாய்வுத்துறை விழைகின்றது.

## கருத்தரங்கின் நோக்கம்

மக்களால் தலைமுறை தலைமுறையாக மரபுவழியில் உண்டாக்கப்படும் ஆக்கங்கள் நாட்டுப்புற வழக்காறுகள் (Folklore) என அறியப்படுகின்றன. இவை நாட்டுப்புற மக்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்து, உயிர்பெற்றுச் சமுதாயத்தில் உலா வருகின்றன. வாய்மொழி இலக்கியம் (Verbal art), பொருள்சார் பண்பாடு (Material culture), சமூகவழக்கங்கள் (Social customs), நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் (Performing folk arts) என்னும் பெரும்பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்ற நாட்டுப்புற வழக்காறுகளை அறிவியல் அணுகுமுறையில் ஆராய்கின்ற அறிவுத்துறையாக நாட்டுப்புறவியல் வளர்ந்துள்ளது. வழக்காறுகளைச் சேகரித்தல், வகைப்படுத்துதல், ஆராய்தல் என்னும் மூன்று நிலைகளில் தமிழ்நாட்டில் வளர்ந்துவருகின்ற நாட்டுப்புறவியல் துறை, தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்குத் துணைபுரியும் பெருங்கருவியாக அமைந்துள்ளது.

தமிழ் மண்ணில் விளைந்த பாமரர்தம் எண்ணக்கிடக்கையாம் நாட்டுப்புற வழக்காறுகள் உயரிய அறிவுமரபை இந்தியத் திருநாட்டிற்கும் உலகத்திற்கும் தொடர்ந்து வழங்கி வந்துள்ளன. தமிழ்நாட்டில் வழங்கிவரும் நாட்டுப்புற வழக்காறுகளின் வாயிலாகத் தமிழினத்தின் தொன்மையையும் தமிழர்தம் அறிவுச்செழுமையையும் பண்பாட்டு நீட்சிகளையும் ஆராய்வதே இக்கருத்தரங்கின் முதன்மை நோக்கமாக அமைகிறது.

## ஆய்வுக்களங்கள்:

இந்திய அறிவுமரபுக்குத் தமிழக நாட்டுப்புற வழக்காறுகள் வழங்கியுள்ள பங்களிப்பை ஆராய்வதோடு உலகளாவிய துறைகளோடு ஒப்பிடத்தக்க அவற்றின் தனித்தன்மைகளை அடையாளம் காண்பதாக ஆய்வுக்கட்டுரைகள் அமைந்திடவேண்டும். அதாவது தமிழ்நாட்டில் வழங்கிவரும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புறக்கலைகள், கைவினைப்பொருள்கள், நம்பிக்கைகள், தெய்வங்கள், விளையாட்டுகள், மருத்துவம், ஊர்ப்பெயர்கள் போன்ற நாட்டுப்புற வழக்காறுகள், ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்படுவதற்கான ஆய்வுக்களங்களாக அமையலாம்.

- ♦ தாலாட்டுப் பாடல்கள் காட்டும் குழந்தை உளவியல்
- ♦ மார்க்சியப் பார்வையில் தொழில்பாடல்கள்
- ♦ பெண்ணிய நோக்கில் ஒப்பாரிப் பாடல்கள்
- ♦ நாட்டுப்புறக்கதைகள் கையாளும் குறியீடுகள்
- ♦ கதைப்பாடல்கள் சித்திரிக்கும் சமூக வாழ்வியல்
- ♦ நாட்டுப்புறக்கதைகளில் அமைப்பியல் ஆய்வு
- ♦ கதையாடல் நோக்கில் நாட்டுப்புறக்கதைகள்
- ♦ பழமொழிகளில் பொருண்மையியல் கூறுகள்
- ♦ பழமொழிகள்வழி பழந்தமிழரின் அறிவியல் நோக்கு
- ♦ விடுகதைகளில் காணலாகும் சூழலியல் சிந்தனைகள்
- ♦ நிகழ்த்துக்கலைகளின் மரபும் மாற்றமும்
- ♦ ஊடகங்களில் நாட்டுப்புறக்கலைகளின் செல்வாக்கு
- ♦ நாட்டுப்புற வழக்காறுகள் புலப்படுத்தும் மானுடவியல்
- ♦ வழக்காறுகள்வழி பழந்தமிழரின் வானியல் அறிவு
- ♦ நாட்டுப்புறத் தெய்வங்களும் தத்துவ மரபும்
- ♦ நாட்டுப்புறவியல் வளர்த்த இசைக்கலை
- ♦ அரங்கவியலுக்குக் கூத்துகள் வழங்கிய கொடை
- ♦ இனவரைவியல் நோக்கில் நாட்டுப்புற ஆடல்கள்
- ♦ தமிழகம் வளர்க்கும் கைவினைப் பொருள்கள்
- ♦ நாட்டுப்புறத் திருவிழாக்கள் வெளிப்படுத்தும் சமூகவாழ்வியல்
- ♦ நாட்டுப்புற விளையாட்டுகள் குறித்த மீளாய்வு
- ♦ நாட்டுப்புற மருத்துவத்தில் மூலிகைகளின் பங்கு
- ♦ வரலாற்றுப் பார்வையில் தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்கள்
- ♦ நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வையில் வழக்காறுகள்

(மேற்கண்ட பொருண்மைகளை மாதிரியாகக் கொண்டு தங்கள் ஆய்வுத்தலைப்பை அமைத்துக் கொள்ளலாம்)

## ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை:

கட்டுரைகள் **A4** தாளில் எட்டுப் பக்க அளவில் **Arial Unicode Ms** என்னும் ஒருங்குறியீட்டு (Unicode) எழுத்துருவில் மட்டும் **'Font Size 12, Line Space 1.5** கணினித்தட்டச்சு செய்து tamilseminarsjc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **08.02.2026** க்கு முன்பாக அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வுச் சுருக்கம், திறவுசொற்கள், முன்னுரை ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் முடிவுரை, சான்றெண் விளக்கம், துணை நூற்பட்டியல் ஆகியவை இடம்பெறல் வேண்டும்.

.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் அச்சு வடிவில் நூலாக **ISBN** எண்ணுடன் வெளியிடப் பெறும்.

| பேராளர் பதிவுக்கட்டணம் | |
|---|---|
| பேராசிரியர்கள் ₹ **800/** | ஆய்வாளர்கள் : **500/** |

பேராளர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்கில் தொகையைச் செலுத்திவிட்டுக் கூகுள் படிவத்தின் ( Google form) வாயிலாகத் தங்கள் பங்கேற்பைப் பதிவுசெய்திட வேண்டும். தொகை செலுத்தியதற்கான சான்றும் பதிவுப்படிவத்தில் இணைக்கப்பட வேண்டும்.

**கருத்தரங்கக் கட்டணம் செலுத்த இந்த இணைப்பைச் சொடுக்கவும்.**

https://service.sjctni.edu/Seminar/25/index.php?programcode=TA07085620

**பதிவு செய்ய இந்த இணைப்பைச் சொடுக்கவும்.**

https://forms.gle/DWqYAWT2gB4C3cnUA